அரசு பஸ்களில் மீண்டும் திருவள்ளுவர் படம்: முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜூன்.17

அனைத்து அரசு பஸ்களிலும் மீண்டும் திருவள்ளுவர் படம் வைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சரவையில் கருணாநிதி போக்குவரத்துத்துறை அமைச்சராக பதவி வகித்தார். அப்போது கருணாநிதி, 'தனி மனித ஒழுக்கத்தையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் 2 அடிகளில் தெளிவாக விளக்கும் உலக பொதுமறை நூலான திருவள்ளுவரின் திருக்குறள் அனைத்து அரசு பஸ்களிலும் இடம் பெற வேண்டும். திருவள்ளுவரின் படமும் வைக்கப்பட வேண்டும்' என்று உத்தரவிட்டார்.

அதன்படி அனைத்து மாநகர, தொலைதூர அரசு பஸ்களில் திருவள்ளுவர் படத்துடன் திருக்குறள்கள் இடம் பெற்றன. டிரைவர் இருக்கைக்கு பின்புறம் பயணிகள் கண்ணில் சட்டென்று தெரியும் வகையில் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் வைக்கப்பட்டன.

மேலும் பயணிகள் அமரும் ஜன்னல் இருக்கை ஓரம் திருக்குறள் எழுத்து வடிவிலும், ஸ்டிக்கர் வடிவிலும் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தநிலையில் அரசு பஸ்களில் திருவள்ளுவர் படத்தை சரியாக பராமரிக்காததால், மங்கலாக இருப்பதும் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் கவனத்துக்கு வந்தது.

இதுகுறித்து அவர் உடனடியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கவனத்துக்கு கொண்டு சென்றார். இதையடுத்து அமைச்சர் ராஜகண்ணப்பனை அழைத்து மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

அப்போது மு.க.ஸ்டாலின், 'அனைத்து போக்குவரத்து கழக பஸ்களிலும் திருவள்ளுவர் படம், திருக்குறள், அந்த குறளுக்கான விளக்கவுரையும் பயணிகள் பார்வையில் எளிதில் தென்படும் வகையில் இடம் பெற வேண்டும்.

திருவள்ளுவரின் எந்த மாதிரியான புகைப்படம் வைக்க வேண்டும். எந்த குறள் இடம் பெற வேண்டும் என்பதை நான் தேர்வு செய்து தருகிறேன்' என்று அமைச்சர் ராஜகண்ணப்பனிடம் தெரிவித்ததாக தெரிகிறது.

இதன் மூலம் அனைத்து அரசு பஸ்களிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் விரைவில் காட்சி அளிக்கும். திருக்குறளும், அதன் விளக்கவுரையும் இடம் பெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடல்நீரை குடிநீராக்கும் நெம்மேலி நிலையங்களில் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் ஆய்வு

சென்னை, ஜூன் 17–

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நெம்மேலி சுத்திகரிப்பு நிலையத்தை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் சா.விஜயராஜ்குமார் பார்வையிட்டார்.

மேலும், அருகில் அமையவுள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் கன லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்று வரும் கடல்நீரை உள்வாங்கும் ஆழ்நிலை நீர் தேக்க தொட்டி, கரைந்த காற்று நிறைத்தல் தொட்டி, வடிகட்டப்பட்ட கடல்நீர் தேக்க தொட்டி, நுண் வடிகட்டி மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் கட்டிடம், சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கும் நீர் தேக்க தொட்டி மற்றும் சுத்திக்கரிக்கப்பட்ட நீர் உந்து நிலையம் ஆகியவற்றின் கட்டுமான பணிகளிலும் ஆய்வு மேற்கொண்டார்.

சுத்திக்கரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தில் இருந்து விநியோகம் செய்ய பல்லாவரம் வரை 40 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1400/1200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குழாய் பதிக்கும் பணி மற்றும் சோழிங்கநல்லூரில் அமையவுள்ள 6.80 மில்லியன் கன லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் நீர் உந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, விஜயராஜ் குமார், நிலையத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகள் மற்றும் குழாய் பதிக்கும் பணிகளை திட்டமிட்ட காலத்திற்கு முன்பே முடிப்பதற்கு ஏதுவாக வாரிய அதிகாரிகளுக்கும் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கும் திட்டமிட்டு பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது பொறியியல் இயக்குநர் கு.மதுரைநாயகம், தலைமை பொறியாளர்கள் பி.ராசாராம், எஸ். சமிலால் ஜான்சன், மேற்பார்வை பொறியாளர் ஆர்.மோகன், செயற்பொறியாளர் எஸ்.கிருபாகரவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

கட்டுமான பொருட்களின் விலை உயர்வை குறைக்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை

உற்பத்தியாளர்களுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை

சென்னை, ஜூன்.17

கட்டுமான பொருட்களின் விலை உயர்வை உற்பத்தியாளர்கள் குறைக்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரித்துள்ளார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நிருபர்களுக்கு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பேட்டி வருமாறு:

கலை பண்பாட்டுத்துறையின் கீழ் வரும் இயல், இசை நாடக மன்றம், அரசு கவின் கலைக்கல்லூரிகள், அரசு இசைக் கல்லூரி, இசைப் பல்கலைக்கழகம், தொல்லியல், அருங்காட்சியகங்கள் துறை, நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியம் உள்ளிட்ட அமைப்புகளின் பணிகள்; அவற்றை செம்மையாக செய்வது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கட்டுமானப்பொருட்களின் விலை உயர்ந்துள்ள தகவல் வந்ததும், முதலமைச்சர் என்னை அழைத்து பேசி, அவற்றின் விலையை குறைக்க அறிவுரை வழங்கினார். அவரது உத்தரவின்படி சிமெண்ட் உற்பத்தியாளர்களுடன் பேசினோம்.

கட்டுமானத்திற்கான இரும்பு கம்பி உள்ளிட்ட பொருட்களின் விலையை கட்டுக்குள் வைக்க வேண்டும். இதில் விலை உயர்வை அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளோம். அவர்கள் விரைவில் நல்ல முடிவை

தெரிவிப்பார்கள்.

வீடு கட்டும் அல்லது வீடு வாங்கும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தையும், அரசின் நிலைப்பாட்டையும், உற்பத்தியாளர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

விலை குறைப்பு நடவடிக்கைகளில் உற்பத்தியாளர்கள் முன்வராவிட்டால் சட்டப்படியான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

கீழடியில் தற்போது 7ம் கட்ட ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வில் மிக முக்கியமான பொருட்கள் கிடைத்துள்ளன. அகழ் வைப்பகம் அமைக்கும் பணிகளை ஆய்வு செய்துள்ளோம்.

உலகத்தரம் வாய்ந்த அகழ் வைப்பகம் அமைக்கப்படும். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஆய்வு மூலம் தாமிரபரணி நாகரிகத்தை காட்சிப்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகத்தில் மேலும் 18 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூன்.17

தமிழகத்தில் மேலும் 18 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புதிய முயற்சிகள் நிறுவன இயக்குநர் விபு நய்யர், சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மைச்செயலாளராக முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

'ஐம்வார்ம்' (நீக்கப்பட்ட விவசாய நவீனமயமாக்கல் மற்றும் நீர் உடல்கள் மறுசீரமைப்பு மற்றும் மேலாண்மை) திட்ட இயக்குனர் மங்கத்ராம் சர்மா, சமூக சீர்திருத்த துறை முதன்மைச் செயலாளராக முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குனர் சந்திரகாந்த் பி.காம்ளே. நில சீர்திருத்த ஆணையராக முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

விருதுநகர் மாவட்ட முன்னாள் கலெக்டர் ஆர்.கண்ணன், இந்துசமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

காஞ்சீபுரம் மாவட்ட முன்னாள் கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணைச்செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்னாள் இணை ஆணையர் (கல்வி) சங்கர்லால் குமாவத் வணிக வரிகள் (பெருவரி செலுத்துவோர் பிரிவு) இணை ஆணையராக நியமிக்கப்பட்டார்.

பொதுத்துறை (சட்டம் மற்றும் ஒழுங்கு) துணைச் செயலாளர் எஸ். பி.அம்ரித், நகராட்சி நிர்வாக இணை ஆணையராக மாற்றப்பட்டார்.

நகராட்சி நிர்வாக இணை ஆணையர் கலைச்செல்வி மோகன், சர்வே மற்றும் செட்டில்மெண்ட் கூடுதல் இயக்குனராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

நாகர்கோவில் மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமையின் திட்ட அதிகாரியும், கூடுதல் இயக்குனருமான (மேம்பாடு) ஐ.எஸ்.மெர்சி ரம்யா, கோவை வணிக வரிகள் இணை ஆணையராக மாற்றப்பட்டார்.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை சார்பு செயலாளர் நிஷாந்த் கிருஷ்ணா, ஓசூர் சப்–கலெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

சென்னை மாவட்ட முன்னாள் கலெக்டர் ஆர்.சீதாலட்சுமி, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை இணை ஆணையராக மாற்றப்பட்டார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இணைச்செயலாளர் எஸ்.வளர்மதி, சமூகப் பாதுகாப்பு இயக்குனராக மாற்றப்பட்டார்.

வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் எம்.லட்சுமி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் இணைச்செயலாளர் ஆனார்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குனர் மற்றும் திட்ட இயக்குனருமான ஆர். கோபாலசுந்தர்ராஜ், தென்காசி மாவட்ட கலெக்டரானார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் செயல் இயக்குநர் ஜெ.யூ.சந்திரகலா, ராமநாதபுரம் மாவட்ட கலெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

மின் ஆளுமை இணை இயக்குனர் ஏ.கே.கமல் கிஷோர், தமிழ்நாடு பைபர் நெட் கழக மேலாண்மை இயக்குனராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல துணை ஆணையர் (வடக்கு) பி.ஆகாஷ், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய செயல் இயக்குனராக மாற்றப்பட்டார்.

உதகமண்டலம் மலைப் பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் கே.எம். சரயு, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவன செயல் இயக்குனரானார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

டி.என்.பி.எஸ்.சி. செயலாளராக உமா மகேஸ்வரி நியமனம்

சென்னை, ஜூன்.17

டி.என்.பி.எஸ்.சி. செயலாளராக ஐ.ஏ.எஸ் அதிகாரி உமா மகேஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலராக சுதனும், செயலாளராகநந்தகுமாரும்இருந்தனர். புதிய அரசு பொறுப்பேற்றதில் இருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த 13ந்தேதி 54 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதில், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலராக இருந்த சுதனும் மாற்றப்பட்டார். அதேபோல் செயலாளராக இருந்த நந்தகுமார், ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டு, தற்போது அவர் பள்ளிக்கல்வி ஆணையராக உள்ளார்.

இந்த நிலையில் டி.என்.பி.எஸ். சி. செயலாளர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலராக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 2 பேர் நியமனம் செய்யப்பட்டு இருக்கின்றனர். இதுதொடர்பாக டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலராக கிரண் குராலாவும், செயலாளராக பி.உமா மகேஸ்வரியும் நியமிக்கப்பட்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் செந்தொகைகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி செந்தொகைகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் செந்தொகை மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்சொன்ன சட்டம்) பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் செந்தொகை மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) விதிகள் 3(1)-ன் கீழ், கடன்தாரர்கள், ஷமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்துமாறு மேற்கண்ட சட்டம், பிரிவு 13(12) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 3–ன்படி IFL ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (IFL HFL) (முன்னர் இந்திய இன்பேஸலன் ஹவுசிங் பைனான்ஸ் லிட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கடன் தொகையை திரும்பி செலுத்துமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செலுத்த வேண்டிய தொகை, டிமாண்ட் நோட்டீஸ் தேதியில் இருந்து தொகையை செலுத்தும் நாள் வரையிலான வட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்களின் விவரங்கள், டிமாண்ட் நோட்டீஸ் தேதி அன்று உள்ள நிலுவைத் தொகை மற்றும் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக அளிக்கப்பட்ட பத்திரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்)
திருமதி. சதா ரொக்காஜன், திரு. கோகுலகிருஷ்ணன் S. திரு. ராஜேந்திரன் S. மெசர்ஸ் ஸ்ரீடியோ சிநாஞ்சலி (புரஸ்பெக்ட் எண்.737345)	10 ஜூன், 2021 ரூ.16,37,456/– (ரூபாய் பதினாறு லட்சத்து மூப்பத்தேழாயிரத்து நானூற்று அறுபத்தாறு மட்டும்)	தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி, விழுந்தியம்பாக்கம் கிராமம், சேக்காடு சாலை வார்டு 97, பிளாக் எண்.21, டவுன் சர்வே எண்கள்:11/1 பகுதி & 19/1 பகுதி, சர்வே எண்கள்.35/1மு பகுதி 35/2பி, 35/6 & 24, விஜிண்ண நாயேல, ஏ பிளாக், 2வது தளம், பிளாட் எண்.203, சூப்பர் பில்டப் ஏரியா 638 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 243 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது.
திரு. அமரேந்திர குமார் நாயக் J. திருமதி. ராஜலட்சுமி குருமூர்த்தி. (புரஸ்பெக்ட் எண்.736457)	10 ஜூன், 2021 ரூ.20,61,785/– (ரூபாய் இருபது லட்சத்து அறுபத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்தைந்து மட்டும்)	தமிழ்நாடு, காஞ்சிபுரம், குன்றத்தூர் கிராமம், பெம்பிரி வேல்வன், ஜெ பிளாக், 4வது தளம், பிளாட் எண்.டெ–621, சூப்பர் பில்டப் ஏரியா 630 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 237 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது

மேற்கண்ட கடன்தாரர்கள் IFL HFL–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடு பெற்ற ஆஸ்திகள் மீது IFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் கட்டணங்கள் கடன்தாரர்களையே சேரும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம் : பார்க்கர் பிபூச்சார டவர்ஸ், 10/01, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 0017/ அல்லது காப்பரேட் அலுவலகம்: IFL டவர், மனை எண். 98, உத்யோக் விஹார், பேஸ்–IV, குர்கான், ஹரியாணா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை
தேதி: 17.06.2021

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (IFL HFL)

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் செந்தொகைகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி செந்தொகைகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் செந்தொகை மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்சொன்ன சட்டம்) பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் செந்தொகை மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) விதிகள் 3(1)-ன் கீழ், கடன்தாரர்கள், ஷமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்துமாறு மேற்கண்ட சட்டம், பிரிவு 13(12) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 3–ன்படி IFL ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (IFL HFL) (முன்னர் இந்திய இன்பேஸலன் ஹவுசிங் பைனான்ஸ் லிட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கடன் தொகையை திரும்பி செலுத்துமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செலுத்த வேண்டிய தொகை, டிமாண்ட் நோட்டீஸ் தேதியில் இருந்து தொகையை செலுத்தும் நாள் வரையிலான வட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்களின் விவரங்கள், டிமாண்ட் நோட்டீஸ் தேதி அன்று உள்ள நிலுவைத் தொகை மற்றும் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக அளிக்கப்பட்ட பத்திரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்)
திரு. மணிகண்டன் D. ஸ்ரீநாகர்கால், திருமதி. ஜீவிதபிரபா B (புரஸ்பெக்ட் எண்.833568 & 711944)	10 ஜூன் 2021 புரஸ்பெக்ட் எண்.833568, ரூ.14,81,963/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எண்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று மட்டும்) புரஸ்பெக்ட் எண்.711944, ரூ.4,28,890/– (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மட்டும்)	தமிழ்நாடு – 600 062, சென்னை, திருமுல்லைவாயல், பாரதி நகர், 5வது தெரு, மனை எண்.5, பழைய எண்.9, புதிய எண்.12, எம்.எல்.கே. பவன்டேஸன் என்று அழைக்கப் படும் கட்டிடத்தில் மல்லல்சே பிளாட்ஸ், பிளாட் எண்.எப–26 உள்ள 845 சதுர அடி பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்
திரு. கார்த்திக் R திருமதி. அய்யம்மாள் R KMJ அரேசர்பெட்ஸ் (புரஸ்பெக்ட் எண்.751005)	10 ஜூன் 2021 ரூ.12,74,439/– (ரூபாய் முப்பத்தாயிரத்து எழுபத்து நான்காயிரத்து நானூறு மூப்பத்தொன்பது மட்டும்)	தமிழ்நாடு – 600 095, சென்னை, வாணகரம் கிராமம், சென்னை பைபாஸ் சாலையில் ரோடு, தக்ஷின் வெற்றி தாமன், பிளாட் எண்.பி, 2வது தளம், பி பிளாக்–ல் உள்ள 1271 சதுர அடி பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்
திரு. ஜெஸ் ஜோஸ், ஜெய் ஜோஸ் மிஸ்டிக் அஸ்டேட்டஸ், திருமதி. G. ஜோதி. marriagechemra.com (புரஸ்பெக்ட் எண்.760897 & 943015)	10 ஜூன் 2021 புரஸ்பெக்ட் எண்.760897 ரூ.58,64,694/– (ரூபாய் ஐம்பத்தெட்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று தொண்ணூற்றி நான்கு மட்டும்) புரஸ்பெக்ட் எண். 943015 ரூ.2,82,643/– (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து அறுநூற்று நாற்பத்து மூன்று மட்டும்)	தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், மதுவாய் நாலுக்கா, திருவொற்றியூர் கிராமம், பிளாக் – 19, வார்டு – ஜி, கிளைய பேக்டரி சாலை, பழைய சர்வே எண்.317 முதல் 330/1எ1எ2 பகுதி, டிஸஸ் எண்.11/1, ஹன்சுர எஸ்டேட், முதல் தளம், மனை எண்.3இ, பிளாட் எண்.எப்-2, பில்டப் ஏரியா 714 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 430 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளையும் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது
திரு. மேகநாதன் R, திரு. ராமன் R V, மெசர்ஸ் ஸ்ரீ பவானி என்ஜினியரிங் கான்ட்ராக்டர்ஸ் (புரஸ்பெக்ட் எண்.768648)	10 ஜூன் 2021 ரூ.15,96,198/– (ரூபாய் பதினைந்து லட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து நூற்று தொண்ணூற்றிஎட்டு மட்டும்)	தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், மதுவாய் நாலுக்கா, திருவொற்றியூர் கிராமம், பிளாக் – 19, வார்டு – ஜி, கிளைய பேக்டரி சாலை, பழைய சர்வே எண்.317 முதல் 330/1எ1எ2 பகுதி, டிஸஸ் எண்.11/1, ஹன்சுர எஸ்டேட், முதல் தளம், மனை எண்.3இ, பிளாட் எண்.எப்-2, பில்டப் ஏரியா 714 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 430 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளையும் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது
திருமதி. சுகுணா M, திரு. மோகனகந்தாம் N (புரஸ்பெக்ட் எண்.772179)	10 ஜூன் 2021 ரூ.17,12,617/– (ரூபாய் பதினேழு லட்சத்து பன்னிரண்டாயிரத்து அறுநூற்று பதினேழு மட்டும்)	தமிழ்நாடு, காஞ்சிபுரம், திருகழுக்குன்றம், பூஞ்சேரி கிராமம், சர்வே எண்.61/1எ பகுதி, 61/1பி பகுதி, 61/2எ, 61/2பி1 பகுதி, 61/2பி2 பகுதி, காம்பாக்ட் நோபல்ஸ் - திரிவேணி, பிளாக் எண்.3, மூன்றாவது தளம், அபார்ட்மெண்ட் மனை.29, பில்டப் ஏரியா 590 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 329 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளையும் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது
திரு. சிவகுமார் M, திருமதி. அனிதா S, பாக்டச் கேட்டரிங் சர்வீஸ், (புரஸ்பெக்ட் எண்.747289)	10 ஜூன் 2021 ரூ.45,22,224/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து இருபத்திஇரண்டாயிரத்து எழுநூற்று இருபத்து நான்கு மட்டும்)	இந்தியா, தமிழ்நாடு, சென்னை - 600 077, திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் முதல் தெரு, மனை எண்.6, விஸ்தீரணம் 4788 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளையும் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது
திரு. பவுலன் G, திரு. கோவிந்தன் K, (புரஸ்பெக்ட் எண்.724703)	10 ஜூன் 2021 ரூ.24,03,933/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்)	இந்தியா, சென்னை - 600 118, கோட்டை தண்டையார்பேட்டை தாலுக்கா, கெடுங்கையூர் கிராமம், பிளாக் எண்.3, பழைய சர்வே எண்.5/1எ1எ பகுதி, 5/19, டி.எஸ்.எண்.29/7, பட்டா/ப்ப.சி.ஏ. எண்.1594/011-12, எஸ்டி/330/011-012, ஆவணப்படி சர்வே எண்.5/ஏ1, புதிய சர்வே எண்.5/1எ1ஏ, சர்வே எண்.5/1, கட்டபொம்மன் பிரதான சாலை, மனை எண்.3 பகுதி மற்றும் 4 பகுதி, சுதா ஹோம்ஸ், முதல் தளம், பிளாட் எண்.இ, 722.76 சதுர அடியையும் சேர்த்து பிளிந்த ஏரியா 765 சதுர அடி மற்றும் சிறு துண்டுகளையும் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது

மேற்கண்ட கடன்தாரர்கள் IFL HFL–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடு பெற்ற ஆஸ்திகள் மீது IFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் கட்டணங்கள் கடன்தாரர்களையே சேரும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம் : பார்க்கர் பிபூச்சார டவர்ஸ், 10/01, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 0017/ அல்லது காப்பரேட் அலுவலகம்: IFL டவர், மனை எண். 98, உத்யோக் விஹார், பேஸ்–IV, குர்கான், ஹரியாணா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை
தேதி: 17.06.2021

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (IFL HFL)

துபாயிலிருந்து சென்னைக்கு ஜூஸ் தயாரிக்கும் இயந்திரத்தில் மறைத்து வைத்து கடத்திய ரூ. 10 லட்சம் தங்கம் பறிமுதல்

சென்னை, ஜூன் 17–

துபாயில் இருந்து சென்னைக்கு ஜூஸ் தயாரிக்கும் இயந்திரத்தில் மறைத்து வைத்து கடத்தி வரப்பட்ட ரூ.10 லட்சம் மதிப்புள்ள தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு துபாயில் இருந்து சிறப்பு விமானம் வந்தது. அதில் பெரும் அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்க இலாகா கமிஷனர் ராஜன் சவுத்ரிக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவரது உத்தரவின்பேரில் அந்த விமானத்தில் வந்த பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகள் தீவிரமாக சோதனை செய்தனர். அப்போது கடலூரை சேர்ந்த அருள்ராஜ் சுப்பிரமணியன் (வயது 41) என்பவரை சந்தேகத்தின்பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவரது உடமைகளை சோதனை செய்தனர். அவரிடம், உடனடியாக ஜூஸ் தயாரித்து குடிக்கும் நவீன இயந்திரம் (ஜூசர் பாட்டில்) இருந்தது.

அதன்மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா அதிகாரிகள், ஜூஸ் தயாரிக்கும் அந்த கருவியை பிரித்து பார்த்தனர். அதில் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். அவரிடம் இருந்து ரூ.10 லட்சம் மதிப்புள்ள 200 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்த